தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.7.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆதவன் தீட்சண்யா, என்.சுப்பிரமணிய தம்பிரான், வி.பிரபு, பண்ணை எம்.பி. சிங்காரவேலன், வீரசங்கர், பாசூர் டி. செல்வராஜ், ஏ.கருப்பையா, டி. சேர்மதுரை, ஆர்.எஸ்.மணிகண்டன், திருமதி சி.கலாராணி மற்றும் புதிய ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் எம். கலைவாணன், ஏ.பழனிதேவா, பி.மருங்கன், வாரியச் செயலாளர் திருமதி ஜி.விமலா ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. மணிவாசன், கலை மற்றும் பண்பாட்டுத் துறை இயக்குநர் (பொறுப்பு) திருமதி இரா.கஜலட்சுமி ஆகியோர் உள்ளனர்.

தமிழ்நாடு நகர்ப்புற முன்னணி முதலீட்டுத் திட்டத்தின் மூன்றாம் கட்டமாக

ரூ.1478.34 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நிர்வாக அனுமதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜூலை 23-

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய தொழில் பெரு வழித்தடங்களில், முன்னுரிமை அடிப்படையில் குடிநீர் வழங்கல், கழிவுநீர் மற்றும் வடிகால் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், புதுமையான திட்டங்களை ஊக்குவித்தல், நகர்ப்புர ஆளுகை, மாநில மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் திறனை மேம்படுத்துதல், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, கால நிலை நெகிழ்ச்சி மற்றும் நகர்ப்புர வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களை கொண்ட தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டம், ஆசிய மேம்பாட்டு வங்கி நிதி உதவியுடன் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டத்தின் இரண்டாம் கட்டத்தைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் ரூ.328.06 கோடி நிதி பங்களிப்பு மற்றும் ஆசிய மேம்பாட்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.1,478.34 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டத்தின் மூன்றாம் கட்டத்தை செயல்படுத்த நிருவாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின் கீழ், கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட வடவள்ளி, வீரகேரளம், கவுண்டம்பாளையம் மற்றும் துடியலூர் ஆகிய 4 பகுதிகளில் ரூ.922.16 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம், தூத்துக்குடி மாநகராட்சிக்கு ரூ.87.01 கோடி மதிப்பீட்டிலான மழைநீர் வடிகால் திட்டப்பணிகள் மற்றும் மதுரை மாநகராட்சிக்கு ரூ.370.61 கோடி மதிப்பீட்டிலான குடிநீர் வழங்கல் மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், திட்ட ஆலோசனைப் பணிகள், நிருவாக மேம்பாடு உள்ளிட்ட பணிகளும் செயல்படுத்தப்படும். மேலும், இத்திட்டத்தின் கீழ், பணிகளுக்கு ஒப்புதல் வழங்குவதற்காகவும், திட்ட நிதியை சிறப்பாக பயன்படுத்துவது மற்றும் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவது தொடர்பான திட்டச் செயலாக்க வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்குவதற்காகவும், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை உள்ளடக்கிய அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளிலும் உயர்தரமான சாலைகள், ஆற்றல்மிகு தெருவிளக்குகள், திடக்கழிவு மேலாண்மை, பாதாளச் சாக்கடை வசதி மற்றும் மழைநீர் வடிகால் கட்டமைப்புகள் உள்ளிட்ட பொதுமக்களுக்கு தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்துவதற்கு, அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டப் பணிகளின் மேலும் ஒரு முக்கிய பகுதியாக இத்திட்டம் அமைந்துள்ளது.

அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பிறந்தநாள்!

உங்களின் பரந்த அனுபவமும், முற்போக்கான சிந்தனைகளும் நம்மை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லட்டும்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூலை 23-

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேயின் பிறந்தநாளான நேற்று முன்தினம், அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அவருக்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து மகிழ்ந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மேலும் வலைதளங்கள் வாயிலாக வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், "உங்களின் (மல்லிகார்ஜுன கார்கே) பரந்த அனுபவமும், முற்போக்குச் சிந்தனைகளும் நம்மை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லட்டும்!" என்று வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.7.2023) அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அவர்களின் பிறந்த நாளையொட்டி அவரை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு பிறந்தநாள் வாழ்த்து களைத் தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்கள் சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

மல்லிகார்ஜுன் கார்கே அவர்களே, உங்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்.

இந்த கடினமான காலங்களில், மதச்சார்பற்ற கூட்டணிக்காக ஒருமித்த கருத்தைக் கொண்ட கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகளில் உங்கள் தலைமைத்துவம் உண்மையிலேயே பாராட்டுக்குரியது.

உங்கள் பரந்த அனுபவமும், நமது தேசத்தின் முன்னேற்றத்திற்கான அர்ப்பணிப்பும் எங்கள் அனைவரையும் ஊக்குவிக்கிறது.

வலிமையான INDIAவை உருவாக்குவதற்கான உங்கள் முயற்சிகள், நமது மகத்தான தேசத்தை வடிவமைத்த மதச்சார்பற்ற மற்றும் முற்போக்கான சிந்தனை களுடன் நம்மை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லட்டும்.

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ரூ.9.73 கோடியில் 200 மகளிர் காவலர்கள் தங்கும் வகையில்

சிந்தாதிரிப்பேட்டையில் பெண் காவலர்களுக்கு விடுதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜூலை 23-

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் 200 பெண் காவலர்கள் தங்கும் வகையில் மகளிர் காவலர் விடுதி அமைத்திட ரூ.9.73 கோடி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனை களைக் கையாள்வதில் காவல் துறைக்கு உதவி செய்யும் முதன்மை நோக்கத்துடன் 1973ஆம் ஆண்டில் மகளிர் காவல் பிரிவு நிறுவப்பட்டது. கடந்த 50 ஆண்டுகளில் இந்தச் சூழல் மிகவும் மாறி உள்ளது. சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல், குற்றங்களைத் தடுத்தல் மற்றும் கண்டறிதல், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பணிகளில் மகளிர் காவல் துறையினர் திறம்பட செயலாற்றி வருகின்றனர். மாநிலத்தில் தற்போது 222 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு தாலுகா காவல் நிலையத்திலும் குறைந்தது ஒரு பெண் காவல் உதவி ஆய்வாளர் மற்றும் 3 பெண் தலைமை காவலர்கள் பணியில் உள்ளனர். தமிழ்நாடு காவல் துறையில் 2023ஆம் ஆண்டு மகளிர் காவலர்களின் பொன்விழா ஆண்டை குறிக்கிறது.

தமிழ்நாடு காவல்துறையில் மகளிரின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு சிந்தாதிரிப்பேட்டையில் 200 பெண் காவலர்கள் தங்கும் வகையில் மகளிர் காவலர் விடுதி கட்டப்படும் என்றும், இவ்வசதி பெண் காவலர்கள் சென்னை மாநகருக்கு பணியிட மாறுதல் பெற்று வரும்போதெல்லாம், அவர்களுக்கு அரசு குடியிருப்புகள் கிடைக்கும் வரை அல்லது சொந்தமாக வாடகைக்கு தங்கும் விடுதியை ஏற்பாடு செய்யும் வரை தங்கும் இடமாக பயன்படுத்தப்படும் என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2023-2024ஆம் ஆண்டிற்கான காவல்துறை மானியக் கோரிக்கையின்போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் 200 பெண் காவலர்கள் தங்கும் வகையில் மகளிர் காவலர் விடுதி அமைத்திட 9 கோடியே 73 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு தற்போது நிருவாக ஒப்பளிப்பு செய்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்மூலம், சென்னை மாநகருக்கு பணியிட மாறுதலில் வரும் பெண் காவலர்களுக்கு இம்மகளிர் காவலர் விடுதி பேருதவியாக இருக்கும்.

நாடு முழுவதும் இயற்கை எரிவாயு வழங்கலை உறுதிப்படுத்த - தேசிய அளவில்

எரிவாயு குழாய் தொகுப்பு அமைக்கும் திட்டம் உள்ளதா?

ஒன்றிய அரசுக்கு - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 23-

நாடு முழுவதும் இயற்கை எரிவாயு வழங்கலை உறுதிப்படுத்த தேசிய அளவிலான எரிவாயு குழாய்த் தொகுப்பு ஒன்றினை 2027ஆம் ஆண்டுக்குள் அமைக்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா? அப்படி என்றால் இந்தத் திட்டம் பிரதமர் "கதி சக்தி" பெருந்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா? திட்ட விவரங்கள் என்ன? ஒன்றிய அரசின் நிதி ஆதாரம் எவ்வளவு? என்று பல்வேறு தகவல்களை தெரிவிக்கக் கோரி, திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு வினா எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு ஒன்றிய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணை அமைச்சர் இராமேஸ்வர் தேலி 20.7.2023 அன்று மக்களவையில் பதில் அளித்தார்.

எழுத்துப்பூர்வமாக தரப்பட்ட தனது பதிலில் அமைச்சர் தெரிவித்ததாவது:

"ஒரே இந்தியா ஒரே எரிவாயு தொகுப்பு" என்ற கொள்கை அடிப்படையில் தேசிய அளவிலான எரிவாயுக் குழாய் தொகுப்பு அமைத்திட பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்காற்று வாரியம் ஒன்றிய அரசினால் பணிக்கப்பட்டுள்ளது. அதன்படி நாட்டின் அனைத்து பகுதிகளையும் இணைக்கும் வண்ணம் 33,592 கிலோமீட்டர் நீளம் கொண்ட குழாய் தொகுப்பு அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மொத்தம் 23,173 கிலோமீட்டர் அளவுக்கு பல்வேறு எரிவாயுக் குழாய் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில் 12,202 கிலோமீட்டர் நீளம் குழாய்கள் பல்வேறு மாநிலங்களில் அமைக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு எரிவாயு குழாய் திட்டம்

ஒன்றிய அரசின் நிதி உதவியைப் பொறுத்தவரை, குழாய் தொகுப்பு அமைத்திடும் நிறுவனங்களின் இழப்பை ஈடுகட்டும் நோக்கில் இதுவரை ரூபாய் 10,735 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது, வடகிழக்கு மாநிலங்கள் குழாய் தொகுப்பு மற்றும் மேற்கு வங்காளம் ஒரிசா குழாய் திட்டங்களை செயல்படுத்தும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது குஜராத், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், ஜார்கண்ட், ஒரிசா, மேற்கு வங்காளம், ஆந்திரா, தமிழ்நாடு மற்றும் அனைத்து வடகிழக்கு மாநிலங்களிலும் 12,202 கிலோமீட்டர் நீளம் கொண்ட எரிவாயுக் குழாய்களை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் எண்ணூர் மற்றும் ஆந்திராவின் நெல்லூர் இடையே 160 கிலோ மீட்டர் குழாய் பதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், தற்போது இத்திட்டம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் உள்ளதால் பணிகள் எதுவும் நடைபெறவில்லை. ஏனைய எரிவாயுக் குழாய்கள் பதிக்கும் திட்டங்கள் அனைத்தும் 2023ஆம் ஆண்டுக்குள் நிறைவடையும். இந்தியன் ஆயில் கழகம் செயல்படுத்தும் ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள ஹசாரிபாக் ராஞ்சி குழாய் திட்டம் மட்டும் 2026ல் நிறைவேற்றப்படும். எண்ணூர் நெல்லூர் இடையே அமைக்கப்பட உள்ள திட்டம், தமிழ்நாட்டின் வடகோடிப் பகுதியில் 80 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பகுதிக்கு மட்டுமே பயன் தரும் எரிவாயுக் குழாய் திட்டத்தின் பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை என்பது பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் நாடாளுமன்றத்தில் 20.7.2023 அன்று அளித்த பதிலில் இருந்து தெளிவாகிறது.

திருநெல்வேலி மாவட்ட

பொறுப்பு அமைச்சராக தங்கம் தென்னரசு நியமனம்!

தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜூலை 23 -

திருநெல்வேலி மாவட்ட பொறுப்பு அமைச்சராக அமைச்சர் தங்கம் தென்னரசை நியமித்து இருப்பதாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

மாவட்டங்களில் வளர்ச்சிப் பணிகளைத் துரிதப்படுத்தவும், பொது மக்களுக்குச் சென்றடைய வேண்டிய நலத்திட்ட உதவிகளைக் கண்காணிக்கவும், பொதுமக்களிடமிருந்து பெறப்படுகின்ற மனுக்கள் மீது துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்யவும், பேரிடர் காலங்களில் உடனடியாக தக்க நிவாரண பணிகளை மேற்கொள்ளவும், வருவாய் மாவட்ட வாரியாக அமைச்சர் பெருமக்கள் பொறுப்பு அமைச்சர்களாக நியமனம் செய்து ஏற்கெனவே ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இராமநாதபுரம் மாவட்டத்திற்குப் பொறுப்பு அமைச்சராக நியமனம் செய்யப்பட்டுள்ள நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களை அம்மாவட்டத்திற்கு பதிலாக திருநெல்வேலி மாவட்டத்திற்குப் பொறுப்பு அமைச்சராக நியமனம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகின்ற ஜூலை 24 அன்று தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தர உள்ளதால் வரவேற்பு மற்றும் விழா நிகழ்வுகள் குறித்து ஒருங்கிணைந்த மாவட்டச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைகள் வழங்கி பேசினார். கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி மற்றும் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமை தாங்கினர். மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைத்தலைவர் பி.என்.பி.இன்பசேகரன், நகரச் செயலாளர் நாட்டான் மாது, தொகுதி பார்வையாளர் டாக்டர்.தருண், அவைத்தலைவர்கள் கே.மனோகரன், செல்வராஜ், முன்னாள் எம்.பி.தாமரைச்செல்வன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர்க் கழகச் செயலாளர்கள், இளைஞர் அணியினர், மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் நலனுக்காக

பல்வேறு திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் கருத்தரங்கத்தினைத் துவக்கி வைத்து பேச்சு!

சேலம், ஜூலை 23 -

ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ் தலைமையில் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு "தொட்டு விடும் தூரத்தில் இலக்கு" எனும் உயர்கல்வி பயில்வதற்கான வழிகாட்டுதல் கருத்தரங்கு சேலம் மாவட்டம், உடையாப்பட்டி, நோட்டரி டேம் ஆப் ஹோலி கிராஸ் பள்ளியில் நேற்று முன்தினம் (21.07.2023) நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன் முன்னிலை வகித்தார்கள்.

ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் சிறந்த ஆசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கி, உயர்கல்வி பயில்வதற்கான வழிகாட்டுதல் கருத்தரங்கினைத் தொடங்கி வைத்துப் பேசியதாவது:

தமிழ்நாடு முழுவதும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் 38 மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் ஏகலைவா பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் 2,200 மாணவ, மாணவிகள் மேல்நிலை வகுப்பு பயின்று வருகின்றனர். அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகளில் பயில்கின்ற அனைவரும் உயர்கல்வி பயிலும் வகையில் வழிகாட்டுதல் கருத்தரங்கு உள்ளிட்ட இதுபோன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மற்ற மாநிலங்களைக் காட்டிலும் உயர்கல்விக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை நமது மாநிலத்தில் அதிகமாக இருந்தாலும், இதனை மேலும் அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாணவர்களுக்கும் தந்தையாக இருந்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும் தாட்கோ மூலமாக நீட் மற்றும் உயர் படிப்புகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. வெளிநாடுகளுக்குச் சென்று படிக்கவும் தாட்கோ மூலமாக உதவிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் இதனைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்குச் சென்று படிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இம்மாணவர்கள் சிறந்த முறையில் கல்வி பயில கல்வி உதவித் தொகையுடன் உயர்கல்விக்கான கடன் உதவியும் வழங்கப்பட்டு வருவதால் இதனைப் பயன்படுத்தி, அரசு பள்ளியில் தேர்ச்சி சதவிகிதத்தை மேலும் அதிகரிக்க ஆசிரியர், ஆசிரியைகள் மற்றும் பெற்றோர் பாடுபட வேண்டும். மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகளின் விடுதிகளை மேம்படுத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ் தெரிவித்தார்கள்.

இதனைத்தொடர்ந்து, தமிழ்நாட்டில் சேலம், நீலகிரி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, செங்கல்பட்டு, திருவண்ணாமலை, கோயம்புத்தூர், திண்டுக்கல், திருச்சி, பெரம்பலூர், தருமபுரி, நாமக்கல், ஈரோடு, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி ஆகிய 15 மாவட்டங்களில் செயல்படும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 202223ஆம் கல்வியாண்டில் அரசு பொதுத் தேர்வில் 100 விழுக்காடு தேர்ச்சி வழங்கிய ஆசிரியர்களுக்கு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கி கௌரவித்தார்கள்.